## முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு

| | | | | |
|---|---|---|---|---|
| வழக்கு எண் | OP | 229 | of | 2019 |

2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 16-ம் நாளான இன்று

| | |
|---|---|
| வாதி/பிரதிவாதி<br>மனுதாரர்/எதிர்மனுதாரர் | தரப்பில் ம.சா.2-வது சாட்சியின் வாக்குமூலமானது 1973 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு திரு.பிரபாகரன் என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தட்சிணாமூர்த்தி | தந்தை பெயர் | |
| கிராமம் | | கணவர் பெயர் | |
| ஜாதி | | தாலுக்கா | |
| | | சமயம் | |
| தொழில் | | வயது | 90 |

நாள்-16.03.2026

ம.சா.-2

**குறுக்கு விசாரணை-**

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. மனுதாரர் அழைத்ததால் சாட்சியம் அளிக்க வந்தேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் இறந்துபோன ராதாகிருஷ்ணன் என் நண்பர் என்றும், நாங்கள் இருவரும் பள்ளியில் ஆசிரியர்களாக பணிபுரிந்தோம் என்றும் சொல்லியுள்ளதற்கு ஆவண ஆதாரம் தாக்கல் செய்யவில்லை. ராதாகிருஷ்ணன் தன் 3 மகள்களுக்கும் எந்த தேதி, மாதம், வருடத்தில் பாகம் பிரித்து கொடுத்தார் என்று ஞாபகமில்லை. நான் அவர் எழுதி வைத்த செட்டில்மண்ட் பத்திரத்தை படித்து பார்க்கவில்லை. செட்டில்மண்ட் ஆவணத்தை

தான் ரத்து செய்யப்போவதில்லை என்று அதை தயாரிக்கும் போது எழுதியதாக என்னிடம் சொல்லவில்லை. செட்டில்மண்ட் பத்திரம் எழுதப்பட்ட பிறகு எத்தனை மாதங்கள் கழித்து சாமுண்டீஸ்வரி இறந்தார் என்று எனக்கு தெரியவில்லை. மைனர் குழந்தை எப்போது பிறந்தது என்று எனக்கு தெரியாது. என்னுடன் பணிபுரிந்தவர் என்பதால் சில விவரங்களை மட்டும் ராதாகிருஷ்ணன் என்னிடம் பகிர்ந்துள்ளார் மற்றபடி என்னிடம் அவருடைய குடும்ப விவரங்கள் அனைத்தையும் சொன்னதில்லை. செட்டில்மன்ட் பத்திரம், ரத்து பத்திரம் மற்றும் மீண்டும் குழந்தைக்கு எழுதி வைத்த செட்டில்மன்ட் பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் இடவில்லை. சுப்புலட்சுமி வாடகை பெற்று கொள்ளலாம்என்று ம.சா.ஆ.6 ல் சொல்லப்பட்டுள்ளதா என்றால் ம.சா.ஆ.6 ஐ நான் படித்துப் பார்த்ததில்லை. செட்டில்மன்ட் பத்திரத்தில் சொல்லப்படாத விவரங்களை நான் மனுதாரருக்கு பவ்வியப்பட்டு சாட்சியமாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் சாட்சியம் நிராகரிக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. 3 வாடகைதாரரிடம் இதுநாள் வரை மனுதாரர் ரூ.15 லட்சம் வரை வாடகை தொகையாக வசூலித்துள்ளார் என்று மனுதாரர் என்னிடம் சொன்னாரா என்றால் சொல்லவில்லை. மனுதாரர் தரப்பில் நான் ஆலந்தூர் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்திருக்கிறேன். அந்த நீதிமன்றத்தால் ம.சா.ஆ.5,6 ரத்து செய்யப்பட்ட விவரத்தை மனுதாரர் என்னிடம் சொன்னாரா என்றால் அதுபற்றி சொல்லவில்லை. மைனர் 12 வயதாகி 6 ம் வகுப்பு

படிக்கிறார் என்ற விவரத்தை மட்டும் மனுதாரர் என்னிடம் சொல்லியுள்ளார். மைனர் எந்த பள்ளியில் படிக்கிறார் என்று தெரியாது. சாமுண்டீஸ்வரி இறந்த பிறகு குழந்தயை எதிர்மனுதாரர் ராமசந்திரன்தான் பராமரித்து வருகிறார் என்பது தெரியும். எதிர்மனுதாரர் நடத்தி வரும் ஜூஸ் கடை மற்றும் கேண்டீன் ஆகியவற்றை நான்தான் திறந்து வைத்தேன். எதிர்மனுதாரருக்கு அவர் தகப்பனார் அசையா சொத்துக்களை எழுதி வைத்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. சாமுண்டீஸ்வரி இறந்த பிறகு இரண்டு வருடம் கழித்து ராதாகிருஷ்ணன் இறந்தார் . எதிர்மனுதாரர் குழந்தையை தன்னிடம் காட்டவில்லை என்று அந்த காலக்கட்டத்தில் ராதாகிருஷ்ணன் எதிர்மனுதாரர் மீது புகார் செய்தாரா அல்லது அறிவிப்பு அனுப்பினாரா என்று எனக்கு தெரியாது. நான் எந்த விவரமும் தெரியாமல் பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியத்திற்கு முகாந்திரம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை-இல்லை.

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu